
# அரச தமிழ் நாடக விருது வழங்கல் விழா









வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்

2003-10-23ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6.00மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தமிழ் நாடக விழா

## விருது வழங்கல் நிகழ்வு

## 2001 - 2002

# சிறப்பு மலர்

இலங்கைக் கலைக்கழக தமிழ்

நாடகக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE OF FELICITATION



It is with great plaesure that I extend this message of felicitation to the souvenir, which is being published on the occasion of the State Tamil Drama Festival Awards Presentation Cermony.

Drama, which is a powerful machanism of communication, is also an important medium of entertainment for the common man. It is also a powerful medium to create understanding between all communities in the country.

I am glad to note that the Tamil Drama Panel is holding its drama festival after a lapse of two years and that too, after selecting the best four dramas from the scripts written by well known writers. I am made to understand that tamil drama panel plans to present awards, trophies, certificates and cash in order to promote tamil drama activities without any lapse in the future.

I wish all success to Tamil Drama Festival organized by the Tamil Drama Panel and expect this activity to be continued annually.

**Karunasena Kodithuwakku**

Minister of Human Resources Development,

Education & Cultural Affairs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக்குழு உறுப்பினர்கள்



அருட்தந்தை மரியசேவியர் சவரிமுத்து



ஆர். ராஜசேகரன்



எம். உதயகுமார்



மாத்தளை கார்த்திகேசு



உடப்பூர் வீரசொக்கன்



மெட்ராஸ் மயில்



நாடக விழா போட்டிகள் பூர்த்தியானதும் நடுவர்கள்
கலாநிதி துரைமனோகரன், கந்தையா ஸ்ரீகணேசன், வி. ஜெகநாதன்
ஆகியோர் பார்வையாளர் முன்னிலையில் தீர்ப்பு வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது இனிய நல்வாழ்த்துக்கள்



இந்த நாட்டில் அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் நாடகக் கலை வளர்ந்து வருவது வரலாறு. அந்த வரலாற்றின் நாயகர்களாக கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வைரமுத்து, நாடகத் தந்தை இராஜேந்திர மாஸ்டர், லடில் வீரமணி ஆகியோர் முக்கியத்துவம் வகிக்கின்றனர். கலையரசு சொர்ணலிங்கம் அரங்கேற்றிய "தேரோட்டி மகன்", நடிகமணி வைரமுத்து அரங்கேற்றிய "அரிச்சந்திர மயான காண்டம்", "வள்ளி திருமணம்", நாடகத் தந்தை இராஜேந்திரன் மாஸ்டர் அரங்கேற்றிய "கலிங்கத்து கைதி", லடிஸ் வீரமணி அரங்கேற்றிய "நாடற்றவன்", "கங்காணி மகன்" போன்ற நாடகங்கள் நாடக வரலாற்றில் இடம்பிடித்துள்ளன. அதே போல இன்றைய நாடகக் கலைஞர்களும் வரலாற்றில் இடம்பிடிக்கக்கூடிய நாடகங்களை பல சிரமங்கள் மத்தியில் அரங்கேற்றி வருவதும் பாராட்டுக்குரியதாகும். இந்த நிலையில் பல துன்பங்கள் மத்தியில் நாடகக் கலையை வளர்த்துக் கொண்டிருக்கும் நாடகக் கலைஞர்களுக்கு அரச தமிழ் நாடக விழாவும், அதன் பரிசளிப்பும் வரப்பிரசாதமாகவே அமைகிறது. இந்த விழாக்கள் தொடர்ந்தும் வருடா வருடம் நடைபெறவேண்டுமென்றும், தமிழ் நாடகக் கலைஞர்கள் இதன் மூலம் பயனடைய வேண்டுமென்றும் என் இதயபூர்வமான வாழ்த்துக்களை இந்த மலர் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

இவ்வண்ணம்

**மனோ கணேசன்** (பா.உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- புஸ்பாஞ்சலி நடனம் :- கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரி மாணவிகள்
- வரவேற்புரை :- திரு. ஆர். ராஜசேகரன் (J.P) தமிழ் நாடகக்குழு உறுப்பினர்
- தலைமை உரை :- திரு. எஸ். தில்லைநடராஜா (தமிழ் நாடகக்குழு தலைவர்)
- நாடகக் கலைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கல்
- இசை நடனம் :- கலைத்தென்றல் பரதநாட்டிய நிலையத்தினர்
- சிறப்பு விருந்தினர் உரை :- கௌரவ மனோகணேசன் (பா.உ)
- சிறப்புரை :- திரு. எம். லக்ஷ்மன் பெரேரா (கலாசார திணைக்களப்பணிப்பாளர்)
- சிறப்பு விருந்தினர் உரை :- கௌரவ பெ. இராதாகிருஷ்ணன் (பாராளுமன்ற உறுப்பினர்)
- ஒயிலாட்டம் :- விவேகானந்தா தேசிய கல்லூரி மாணவிகள்
- சிறப்புரை :- பேராசிரியர் அனுராத செனவிரத்தன (தலைவர் இலங்கைக்கலைக்கழகம்)
- விருது வழங்கல்
- வேப்பிலை நடனம் :- கலைத்தென்றல் பரத நாட்டிய நிலையத்தினர்
- பிரதம விருந்தினர் உரை :- மாண்புமிகு கலாநிதி. கருணாசேன கொடிதுவக்கு (மனிதவள அபிவிருத்தி கலாசார அலுவல்கள் அமைச்சர்)
- சிறப்பு மலர் வெளியீடல்
- முதுபெரும் கலைஞர்கள் கௌரவிப்பு
- நன்றியுரை : சமீனா ஸஹீட் (தமிழ் நாடகக்குழு செயலாளர்)
- தேசிய கீதம்

நிகழ்ச்சி தொகுப்பு : ரேலங்கி செல்வராஜா
மொழி பெயர்ப்பு : திரு. எஸ். சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாடக கலைஞர்கள் முன்னேற்றமடைய வாழ்த்துகிறேன்



**தே**சிய தமிழ் நாடக பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். தேசிய அரசியலுக்குள் புகுந்து கடந்த இரண்டு வருடங்களாக பலதரப்பட்ட துறைகளை சார்ந்த எமது மக்களுக்கு சேவையாற்றி வருகின்றேன். ஒரு இனம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், அந்த இனத்தினுடைய மொழி, கலை, கலாசாரம் , மதம் பாதுகாக்கப்பட வேண்டும்.

எமது இலங்கை திருநாட்டை பொருத்தமட்டில் குறிப்பாக தலைநகர் கொழும்பிலே தமிழ் கலைஞர்களுக்கு எந்த விதமான வளங்களோ, உதவிகளோ போதுமானதாக இல்லாத போதிலும், குறைந்த வளங்களை கொண்டு ஓரளவிற்கேனும் தமிழ் கலைகளை பாதுகாத்து வரும் எமது தமிழ் கலைஞர்களை பாராட்டுகின்றேன்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் **கே. ரீ. குருசாமி**, மலையக முன்னணியின் கொழும்புக்கிளை செயளாளர் **திரு. மு. கனகராஜ்** ஆகியோர் மூலமாக எமது தமிழ் கலைஞர்களைப்பற்றிய அறிமுகம் எனக்கு கிடைத்தது. அத்துடன் 2002ம் ஆண்டு நடைபெற்ற தேசிய தமிழ் நாடக விழாவில் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களுக்குரிய விருதுகள் வழங்கப்படாமை குறித்து தமிழ் நாடக குழு உறுப்பினர், கலைஞர் **ஆர். ராஜசேகரன்** எமது கவனத்திற்கு கொண்டு வந்ததை தொடர்ந்து நான் மாண்புமிகு அமைச்சர் **கருணாசேன கொடிதுவக்கு**வின் கவனத்திற்கு அதை சமர்ப்பித்தேன். அதை தொடர்ந்து கௌரவ அமைச்சர் அவர்கள் உடனடியாகவே இவ்விழாவிற்குரிய பணத்தை ஒதுக்கி இவ்விழா இவ்வாறு நடைபெற ஒத்துழைப்பு நல்கியதையிட்டு அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கும், தமிழ் கலைஞர்களுக்குரிய பரிசில்களை பெற்றுக்கொடுப்பதற்கும் அயராது உழைத்த தமிழ் நாடகக் குழு தலைவரும், உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருமான **திரு. எஸ். தில்லைநடராஜா** அவர்கட்கும், தமிழ் நாடகக்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு தமிழ் கலைஞர்கள் முன்னேற்றமடைய எனது இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**பெ. இராதாகிருஸ்ணன்**
(மலையக மக்கள் முன்னணியின்
கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27, 28-11-2002 ம் ஆண்டு நடைபெற்ற
## அரச தமிழ் நாடக விழா போட்டி முடிவுகள்

சிறந்த நாடகம் : "அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"

சிறந்த நடிகர் : எஸ். சத்தியன் "வெளிச்சம் தெரிகிறது"

சிறந்த நடிகை : ஏ. எம். சி. ஜெயஜோதி
"அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"

சிறந்த நாடகப் பிரதி : "வெளிச்சம் தெரிகிறது"
எழுதியவர் : கே. கோவிந்தராஜ்

சிறந்த நெறியாள்கை : பூ. யோகநாதன் "அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது

சிறந்த துணை நடிகர் : கே. சோமசுந்தரம் "தெருவிளக்கு"

சிறந்த துணை நடிகை : மல்லிகா கீர்த்தி "வெளிச்சம் தெரிகிறது"

சிறந்த ஒப்பனை : W. செல்வராஜா
"அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"

சிறந்த காட்சியமைப்பு : எஸ். சத்தியன் "வெளிச்சம் தெரிகிறது"

சிறந்த ஒளியமைப்பு : எஸ். கிங்ஸ்லி "முரண்பாடுகளும் முற்றுப்புள்ளிகளும்"

சிறந்த இசையமைப்பு : எஸ். ரவிச்சந்தர் "முரண்பாடுகளும் முற்றுப்புள்ளிகளும்"

### சிறப்பு பரிசுகள்

ஸ்ரீனிவாசகம் ஸ்ரீ கரன் :- "முரண்பாடுகளும் முற்றுப்புள்ளிகளும்"

எஸ். கந்தையா :- "வெளிச்சம் தெரிகிறது"

சசீதரன் :- "அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"

செல்வம் பெர்ணான்டோ :- "தெருவிளக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக்கலை வாழட்டும் !
# வளரட்டும் !!



நாடக வளர்ச்சிக்காக நமது நாட்டில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மட்டுமல்ல பல நிறுவனங்களும் பங்களிப்பு நல்கி வருகின்றன. அரச அங்கீகாரத்துடன் ஆதரவுடன் இயங்கும் இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழு தன்னாலான முயற்சிகளை மேற் கொண்டுவருகின்ற போதும் தலைவர் என்ற வகையில் இம்முயற்சிகள் மிகவும் அற்பம் சொற்பம் என்பதையே பணிவாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

2002ல் நடாத்திய நாடக விழாவுக்கான பரிசளிப்பை ஒரு வருட காலம் கடந்து நடாத்துவதை எவ்வகையிலும் சாதனை என ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எதிர் காலத்தில் அரசும், ஆதரவாளர்களும், வளங்களையும், வாய்ப்புகளையும் வழங்கி பொறுப்பான பயிற்சிக் களங்கள், தேவையான செயலமர்வுகள், விரிவான கலந்துரையாடல்கள் ஆகியவற்றை முழுமையான அளவில் பூர்த்தி செய்வதுடன், தமிழ் நாடகக் கலை வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக பணியாற்றி எழுச்சி காண வாழ்த்தி, ஒத்துழைப்பு நல்கும் குழு உறுப்பினர் அடங்கலாக அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**உடுவை. எஸ். தில்லை நடராஜா**

(தலைவர்)

தமிழ் நாடகக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகவிழாத் தேர்வு நடுவர் அறிக்கை

இலங்கையின் புகழ்மிக்க நிகழ்ச்சிகளில் ஒன்றாக விளங்குவது அரச தமிழ் நாடக விழா. சிறந்த பல கலைஞர்களை ஒரே மேடையில் தரிசிக்கக் கூடிய வாய்ப்பை இந்நாடக விழா ஆர்வலர்களுக்கு வழங்குகிறது. இம்முறை நாடக விழாவில் இடம்பெற்ற ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு செய்தியைத் தெரிவித்தன. மேடையேற்றப்பட்ட நான்கு நாடகங்களிலும் நிறைகளும் குறைகளும் காணப்பட்டன. குறைகள் எதிர்காலத்தில் குறைக்கப்பட்டு, நாடகங்கள் மேலும் மெருகு பெற்று மேடையேற்றப்பட வேண்டும் எனத் தெரிவிக்க விரும்புகின்றோம். அரச தமிழ் நாடக விழாவில் மேடையேற்றப்பட்ட நான்கு நாடகங்கள் பற்றியும் நடுவர்கள் நன்கு அலசி ஆராய்ந்து ஏக மனதான முடிவுக்கு வந்தோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர் காலத்தில் அரச தமிழ் நாடக விழாக்களில் நாடக கலைஞர்களுக்கான பரிசுகளை மேலும் அதிகரித்தல் நல்லது என்றும் தகவுரை வழங்க விரும்புகின்றோம். திறமையான முறையில் தமிழ் நாடகக் குழுவின் செயற்பாடுகள் அமைந்துள்ளமையை நாம் பாராட்டுகின்றோம்.

**கலாநிதி துரை மனோகரன்**
**கந்தையா ஸ்ரீகணேசன்**
**வி. ஜெகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாடகக்குழு
# செயலாளரின் அறிக்கை



தமிழ் நாடகக் குழுவின் செயலாளர் என்ற வகையில் அரச தமிழ் நாடகவிழா 2001-2002 தொடர்பான விளக்கக் குறிப்பொன்றை முன்வைப்பது அவசியம் என உணர்கின்றேன். காரணம் 2002ம் ஆண்டின் அரச தமிழ் நாடகவிழா பல தடைகளைத் தாண்டி விழாக் கோலம் பூண்டு நிற்கிறது.

பொதுவாக எமது தமிழ் நாடகக்குழுவுக்கு ஏற்பட்ட பணத்தட்டுப்பாட்டுடன், சிலதலையீடுகளும், சிலரது நடவடிக்கைகளும் பாதிப்பை ஏற்படுத்தின. அவற்றை மறந்து கலையை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ள அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதே சிறந்த செயலென தமிழ் நாடகக் கலைக்கென விழாவெடுக்கும் இத்தருணத்தில் உறுதிபூண்டு உள்ளத்தூய்மையுடன் செயற்படுவோம்.

கலை கலாசாரம் போன்றவை மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதில் பாரிய பங்காற்றுகின்றன. அந்தப் பங்களிப்பில் கலாசார அமைச்சில் சேவையில் அமர்ந்து நாடகக் கலைத்துறையின் மேம்பாட்டுக்கு சிறு துளியாக இருந்து செயலாற்ற கிடைத்துள்ள வாய்ப்பை எண்ணி பெருமிதமடைகின்றேன். அந்த வகையில் அரச தமிழ் நாடக விழா 2001-2002 வரலாற்றை திரும்பிப்பார்ப்பது சாலப் பொருத்தமென நினைக்கிறேன்.

2001ம் ஆண்டுக்கான அரச தமிழ் நாடக விழாவிற்கு முன்னாள் தலைவர் காவலூர் இராசதுரையின் தலைமையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதனடிப்படையில் முதல் சுற்று போட்டி கொழும்பில் மாத்திரம் நடாத்தப்பட்டது. **"அகதிச்சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"**, **"தெருவிளக்கு"**, ஆகிய இரண்டு நாடகங்கள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அரச மாற்றம் காரணமாக 2001ம் ஆண்டில் தமிழ் நாடக விழா நடைபெறவில்லை. என்பதுடன் நியமனம் பெற்றிருந்த தமிழ் நாடகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டொரு மாதங்களில் விலகிச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

பல மாத இடைவெளிக்கு பின் புதிய தலைவராக கடமையேற்ற எஸ். தில்லைநடராஜாவின் தலைமையில் 2002.06.14 அன்று தமிழ் நாடகக்குழு கூடி புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானித்ததுடன் வழமையான தமிழ் நாடக விழாவை நடாத்தத் தீர்மானித்தது. 2001 ஆம் ஆண்டுக்கான விழாவும் நடைபெறாததால் அதற்கும் கிடைத்த நாடகப்பிரதிகளும் 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஆண்டுக்கான நாடகப்பிரதிகளும் ஒன்றாக சேர்ந்து தெரிவுக்குழுவுக்கு ஒப்படைப்பதாக முடிவானது. முதல்படியாக கொழும்பு, தலவாக்கலை புசல்லாவ, அக்கறைப்பற்று ஆகிய இடங்களில் முதல்சுற்றுப் போட்டிகள் இடம்பெற்றன. இறுதிச் சுற்றுக்கென நான்கு நாடகங்கள் தெரிவாகின. கவின் கலை மன்றத்தின் "**வெளிச்சம் தெரிகிறது**" கிருஸ்ண கலாலயத்தின் "**முரண்பாடுகளும் முற்றுப்புள்ளிகளும்**" ஜெயசக்தி மன்றத்தினரின் "**அகதிச்சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது**" வாணி கலை இலக்கிய மன்றத்தின் "**தெரு விளக்கு**" ஆகியன.

அரச தமிழ் நாடகவிழா 2002.11. 27, 28 ஆந் திகதிகளில் நடைபெற்றன. அதன்பின் ஏற்பட்ட விழா சம்பவங்கள் தமிழ் நாடக விழா விருது வழங்கலைத் தாமதமாக்கியது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. **லக்ஷ்மன் பெரேரா** அவர்களின் கருணையுள்ளத்தின் வெளிப்பாடே இன்றைய தமிழ் நாடக விழாவின் விருது வழங்கல் நிகழ்வு. முதலில் கடவுளுக்கும் இரண்டாவதாக திரு. லக்ஷ்மன் பெரேராவுக்கும் நன்றி கூற தமிழ் நாடகக்குழு கடமைப்பட்டுள்ளது. இலங்கைக் கலைக் கழகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஆலோசனைகளை வழங்கியும் விமர்சனம் செய்தும் எம்மை உற்சாகப்படுத்தியவர்களுக்கும் தமிழ் நாடகக்குழு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனை விட வெற்றியீட்டியும் பரிசுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பொறுமையாக காத்திருந்த எமது நாடகக் கலைஞர்களுக்கும், தமிழ் நாடகக்குழுவினர் என்ன செய்கிறார்கள் என மௌனமாகவும், உன்னிப்பாகவும் கவனித்துக் கொண்டிருந்த தமிழ் நாடக உலகுக்கும், நேரடியாகவும் மறைமுகமாகவும் உந்து சக்தியாக செயல்பட்ட தமிழ் ஊடகத்துறையிருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ **பெ. இராதாகிருஸ்ணன்** விருது வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தை பாராளுமன்றம் வரை கொண்டு சென்று விழா நடைபெற உந்து சக்தியாக விளக்கியதிற்கு எமது குழுவினரின் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அரச தமிழ் நாடக விழா 2002 ல் விருது பெறும் அனைத்து கலைஞர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கின்றேன்.

***வாழ்த்துக்கள்! நாடகக் கலைஞர்களே.***

**ஸமீனா ஸஹீட்**
செயலாளர்
தமிழ் நாடகக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முது கலைஞர் கௌரவம்

*மக்கள் விழிப்புணர்வு பெறுவதற்கு நாடகக்கலை முக்கிய பணியாற்றியுள்ளது. நாடகக்கலையின் மூலம் ரசிகர்களின் சிந்தனையை தூண்டுவதன் வாயிலாக ஒரு சமுதாயத்தாக்கம், அதனால் ஒரு சமூக மாற்றம் ஏற்படுத்த முடியும். இந்த மாபெரும் கலைக்காக சேவைசெய்த ஒரு ஆண்கலைஞரையும் ஒரு பெண்கலைஞரையும் ஆண்டுதோறும் அரச நாடக பரிசளிப்பு விழாவின் போது கௌரவிக்க வேண்டும் என எங்கள் தமிழ் நாடகக்குழு முடிவெடுத்தது. இந்த நல்ல காரியம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே எங்கள் குழுவினரின் ஆசையாகும். தொடர்ந்துவரும் புதிய குழுக்களும் இதனை வழிநடத்த வேண்டும் என்பதே எமது அன்பு வேண்டுகோளாகும். இம்முறை பரிசளிப்பு விழாவில் கௌரவிப்பதற்காக இரண்டு கலைஞர்களை தேர்ந்தெடுத்துள்ளோம். அந்த இருவரும் திரு. P. S. கிருஷ்ணகுமார் திருமதி. ஜெயகௌரியாகும் பரிசளிப்பு விழா நடைபெறுவதற்கு முன்பாகவே கலைஞர் P. S. கிருஷ்ணகுமார் மரணமடைந்துவிட்டதால் தீர்மானித்த அந்த பரிசினை அவரது மனைவிக்கு வழங்குகின்றோம்.*

**தமிழ் நாடகக் குழு**

# அமரர் கலாபூஷணம் P.S. கிருஷ்ணகுமார்



சிறுவர்மலர் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் அறிமுககான இவர் 1950 ஆம் ஆண்டு கொழும்பு மனோரஞ்சித நாடக சபாவில் காலம்சென்ற நாடகத்தந்தை கே. பி. ராஜேந்திர மாஸ்டருடன் இணைந்து "கலிங்கத்துக் கைதி" "மலர்ந்த வாழ்வு" போன்ற நாடகங்களில் பங்களிப்பு செய்து பின் M.N.M. புரடக்ஸன் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் பல வெற்றி நாடகங்களை மேடையேற்றினார். இதன் பின் இவரது கவனம் இலங்கை திரைப்படம் பக்கம் திரும்பியது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் படமான "தோட்டக்காரி" "மீனவப்பெண்" போன்ற திரைப்படங்களில் நடித்தார் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல்தமிழ் திரைப்படத்தின் கதாநாயகன் என்ற பெருமையும் அவரையே சேரும்.

கேரள வம்சாவழியான அமரர் கிருஷ்ண குமார் இறுதிவரை "மலையாள கலாலயத்தின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கினார். மலையாள கலாலயத்தின் சகல கலாச்சார செயல்பாடுகள், நாடகங்கள், விழாக்கள் யாவும் இவர் தலைமையிலேயே நடைப்பெற்றன. அந்த காலக்கட்டத்தில் கிரிபத்கொடை "நவஜீவன்" ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்ட சகோதர மொழி திரைப்படங்களுக்கும் காத்திரமான முறையில் இவரது பங்களிப்பு கிடைத்துள்ளது. அன்னாரது கலைச்சேவையைப் பாராட்டி அஸிஸ் மன்றத்தினால் "கலாஜோதி" என்ற பட்டமும் கலாசார அமைச்சின் ஆதரவில் "கலாபூஷணம்" பட்டமும், விருதும், பணமுடிப்பும், அண்மையில் "கலாரங்க பீடய "ஆதரவில் பாராட்டும், பணமுடிப்பும் வழங்கப்பட்டது. கலாசார அமைச்சினால் நடாத்தப்படும் "தேசிய நாடகவிழாவில்" மூத்த கலைஞர் வரிசையில் இவருக்கு வழங்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமதி. ஜெயகௌரி



இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் படமான "சமுதாயம்" என்ற திரைப்படத்தின் கதாநாயகியாக நடித்த பெருமைக்குரியவர்தான் இந்த ஜெயகௌரி. ஹென்றி சந்திரவன்ஸ என்பவரால் தயாரித்தளிக்கப்பட்ட 'சமுதாயம்" தமிழ்ப்படத்தில் மறைந்த நம் கலைஞர் தனரட்ணம் அவர்களுடன் ஜெயகௌரி இணைந்து நடித்ததன் மூலம் இலங்கை தமிழ் சினிமாவின் முதல் கதாநாயகி என்ற முத்திரைக்குச் சொந்தக்காரியானார்.

1957ம் ஆண்டு கவின் கலை மன்ற வெளியீடான ஜே.பி. ரொபட், ஜோன் சாமிநாதன் ஆகியோரின் "நூதன லஞ்சம்" நாடகத்தின் மூலம் கலையுலகில் காலடி வைத்தார் ஜெயகௌரி.

தொடர்ந்து ரொசாரியோ பீரிஸின் தயாரிப்பான கே. எம். வாசகர் எழுதிய "வாடாதே", சுஹைர் ஹமீட் அவர்களின் "வாடகைக்கு அறை", லடீஸ் வீரமணி அவர்களின் " தாய் நாட்டின் எல்லையில் "மானங்காத்த மறவன்" ராஜேந்திரம் மாஸ்டரின் மனோ ரஞ்சிதா நாடக சபாவின் "மலர்ந்த வாழ்வு" , "எழில்முடி", "கலிங்கத்துக் கைதி" உட்பட ஐநூறுக்கும் மேலான நாடகங்களில் நடித்து அருஞ்சாதனை புரிந்தவர் ஜெயகௌரி.

கலைவாணர் நாடக மன்றம், தமிழ் முன்னேற்ற மன்றம் ஆகியவற்றின் நாடகங்களிலும் நடித்துள்ள இவர் "மானா" வின் தோட்டத்து ராணி' நாடகத்தில் சிறந்த துணைநடிகை என்ற சிறப்புப் பெற்றார்.

1994ம் ஆண்டு அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் நடத்திய நாடகவிழாவில் "ஊமைகள் உறங்குவதில்லை" என்ற நாடகத்தில் சிறப்பாக நடித்தமைக்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் பாராட்டுச்சான்றிதழ் பெற்றார். இந்தவிழாவுக்கான ஏற்பாடுகளை திரு. எம். அன்பழகன் செய்திருந்தார்.

1996ம் ஆண்டு வினோதன் ஞாபகார்த்தமாக இராமகிருஸ்ண மண்டபத்தில் நடைப்பெற்ற "பாட்டுக்கொரு புலவன் " நாடகத்தில் இவரின் நடிப்பு பார்வையானரின் பாராட்டைப் பெற்றது.

சானா, வாசகர் ஆகியோரின் ஏராளமான வானொலி நாடகங்களிலும் நடித்து சாதனை படைத்ததுள்ள ஜெயகௌரி இன்றும் தன் கட்டழகு குறையாமல் கவர்ச்சிச் சிரிப்புடன் கதாநாயகி போல் காட்சியளிக்கிறார். இவரின் கலை வாழ்வு செழிக்க காலம் துணைபுரியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகப் படைப்பாக்கம்

ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒருமரமும், அதன் கிளைகளும், தளிர்களும், இலைகளும், மொட்டுக்களும் பூக்களும், காய்களும், கனிகளும் புதைந்து கிடக்கின்றன. விதை முளைத்து, வளர்ந்து, கிளைபரப்பி, பயன்தரும் மரமாகி நிற்கும்போது புதியதொரு படைப்பாக நின்று மிளிருகிறது. நாடகப் படைப்பும் இதுபோன்றே பனுவல் ஒன்றினைவித்தாகக் கொண்டு அதனுள் புதைந்து கிடக்கும் மக்களையும், பிரச்சனைகளையும் நிகழ்வுக் கிளைகளாகப் பரவச் செய்து, உணர்வுப்பூக்களாக மலர்ந்து, வாழ்க்கைப்புதிர்களைக் காட்டித்தரும் கனிகளாகப் பயனளித்துக் கலைவடிவமாக மாற்றி நிற்பதாகும். இப்படைப்பு மாற்றத்தை ஆக்கம் செய்வதே நாடகப் படைப்பாகும். இவ்வாக்கக் கலைஞனே இயக்குனன். நாடகத்தை நெறிப்படுத்தும் வெறும் உத்தியாளனோ, நடித்துக்காட்டி அதன் நகல்களை நடிகர்களைக் கொண்டு பிரதிபலிக்கச் செய்யும் பிரதி ஒத்தியெடுப்பவனோ அல்ல இயக்குனன். தனித்துவமிக்க புதிய சிருஷ்டிகளை ஆக்கித்தரும் கலைஞன் அவன், நாடகமானது தனித்துவம் மிக்க கலைப்படைப்பு என்பதாகும். இது இன்றைய நாடக வரலாற்றில் இந்த நூற்றாண்டில் மிகவும் உறுதி செய்யப்பட்ட ஒன்றாகும். இந்த உறுதிப்பாட்டின் சாட்சியாக நாடகப்படிப்பு பல்கலைக்கழகங்களில் பாடமாகி, அதில் இயக்குதலும் நாடகப் படைப்பாக்கமும் தனித்துவமிக்க கிளைகளாகத் திகழ்கின்றன.

நாடகப் படைப்பாக்கம் என்பது சொற் பிரபஞ்சத்துள் அடங்கி நிற்கும் பனுவல் மொழியை மேடை நிகழ்வு என்னும் காட்சி மொழியின் பரிமாணமாகப் புத்தாக்கம் செய்வதேயாகும். இது சிந்தனையோட்டப் படிமங்களை உட்கொண்ட இலக்கியப் பாங்கையும், உணர்ச்சியோட்டப் படிமங்களை இழைத்துச் செல்லும் இசைப்பாக்கங்களையும் தன் வயமாக்கிக் கொண்ட புலன் உணர்வோட்டப் படிமங்களாக்கிக் கவித்துவமிக்கக் காட்சி காவியங்களாக மேடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் பழகிவரும் பேச்சுமொழி, சிந்தனை செறிவான இலக்கியமாவது போல், தொண்டயிலிருந்து கிளம்பும் ஓசை ஏற்ற இறக்கங்கள் கொண்ட இழைவு மொழியாகி இசையாகத் திகழ்வது போல காட்சிக் காவிய ஆக்கத்திற்கும் ஒரு மேடைமொழி உள்ளது. நடிப்புக்கலையை முன்னிருத்திக் காட்சியமைப்பு, ஆடையணி, ஒலி, ஒளியமைப்புக்கள் ஆகியவற்றை பின்பலமாகக் கொண்ட சின்னங்களின் தொகுப்பே அம்மொழியாகும். இம்மொழியுள் மேற்கூறியக் காட்சியமைப்பு முதல் ஒளியமைப்பு ஈராக உள்ள கூறுகள் புறத்தளங்களாகவும் நடிப்புக்கலையின் உள்ளீடான உடல், குரல், சித்திரப்படிமங்கள், நகர்வுகள், சைகைகள், செய்கைகள் ஆகியவற்றின் தள கால வீச்சுக்கள் அகத்தளங்களாகவும் நின்று நிலவுகின்றன. இத்தகைய அகத்தளவீச்சுக்களைப் புறத்தளப் பரிமாணங்களோடு பிணைந்து ஆக்கம் தருவதே நாடகப்படைப்பாக்கமாகும்.

**சே. இராமனுஜம்**
தமிழ் நாடகத்துறை தலைவர்
தஞ்சை பல்கலைகழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டியவர்கள்

நடிப்பு என்பது ஒரு தனித்திறமை விளையாட்டு உணர்வுப் போலச் செய்யும் திறமையும் (Imitation) இணைந்து இருப்பவர்களே இனிமையாகவும், இயல்பாகவும் நடித்துப் புகழ் பெறுவர். தன்னைச் சுற்றி உலகம் எவ்வாறு இயங்குகின்றது என்பதையும் பல்வேறு மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்ற உண்மையினையும் நன்கு அறிந்தாலன்றிச் சிறப்பாக நடிக்க முடியாது. பிறரின் மனவியல்புகள், நடையுடை பாவனைகள், பழக்கவழக்கங்கள், உடலசைவு முறைகள் பல்வேறு சுவை இயல்புகள் ஆகியவற்றைப் பற்றி நன்றாகக் கண்டும் கேட்டும் அறிந்திருக்க வேண்டும். சிலருக்குப் பேச்சு முறையிலும், செயற்பாடு முறையிலும் தனிப்பழக்கங்கள் (mannerism) இருப்பதைக் காணலாம். இவற்றைப் பற்றியெல்லாம் அறிந்தவர்களே சிறந்த நடிகர்களாக உயர முடியும்.

எந்தப் பாத்திரத்தை ஏற்றாலும் அதில் நன்றாக நடிப்பதில் தான் கலைஞரின் திறமை இருக்கிறது. அது சிறிய பாத்திரம் என்று ஒதுக்கினால் கலைபற்றும் ஆர்வமும் குன்றியதாகவே கருதப்படும்.

கலை முகிழ்ப்பின் தன் முனைப்புக்கு இடமே கிடையாது. தான் என்ற எண்ணம் தேய்ந்து கலைதான் சிறந்தது என்ற எண்ணம் வளர வேண்டும். நல்ல கலைத்திறனின் கை வண்ணத்தை அங்குதான் காணமுடியும்.

நடிப்பு என்பது சிறப்பானது என்ற கருத்தை மக்களிடம் பரவச் செய்ததினால் நடிகர்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து ஏற்பட்டது. அவர்களை மக்கள் சிறப்பாகக் கலைஞர்கள் என்று கூறிப்பாராட்டினார்கள். சமுதாயக் கணிப்பில் அவர்களுக்கு உயரிடம் வழங்கப்பட்டது. நாடகம் என்பது ஒரு பயன்மிக்க கவின்கலை என்று அனைவரும் ஒப்புக் கொள்ளுமாறு அதன் நிலையை உயர்த்த வேண்டும்.

மனித சமுதாயத்தின் வாழ்க்கைக்கும், வாழ்க்கைக்கு அடிப்படையான சீர்திருத்ததிற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் , மொழி, கலை வளர்ச்சிக்கும் ஆதாரமாக விளங்குகின்றது நாடகம் என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்வார்கள். இன்னும் ஒருபடி அதிகம் கூறுவோமானால் மனிதப் பிறவி எடுத்த பயனை உண்மையில் அடைய வேண்டுமானால், அஃது நாடகம் ஒன்றினால் தான் முடியும்.

தமிழிசையானால் சிந்தைக்கும் சிறிது உணர்ச்சியைத் தருகின்றது ஆனால், நல்ல நாடகங்கள் ஐம்புலன்கட்கும், மொழி கலை வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அவசியமான ஆனந்தத்தையும் அறிவையும் கொடுக்கின்றன.

இயலில் இசை சேருவதில்லை இசையில் ஒரு பகுதி இயல் சேருகிறது. ஆனால் நாடகத்தில் இயலும், இசையும் சேர்ந்து, அதனுடன் நடிப்பும் அமைந்து நாடகமாகிறது. இயலிற்கும், இசையிட்கும் ஆதாரமாக உள்ளது நாடகமாதலால், இயல் இசை நாடகம் என்று நாடகத்தை இறுதியில் அடிப்படையாக வைத்து முத்தமிழ் என முடிவு கட்டினர் ஆன்றோர்.

**என். எஸ். பெருமாள்**
உலக தமிழாராச்சி நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிச் சிறுவனுக்கு அட்மிசன் கிடைக்கிறது

## நடிகர்களும் நடிகைகளும்

- செ. சக்திதரன்
- ஏ. எம். சி. ஜெயஜோதி
- க. சசிதரன்
- த. மணிவண்ணன்
- கணேசமூர்த்தி கலைச்செல்வி
- சு. ஜெயகாந்தன்
- புவன்யா பிரான்சிஸ்
- ராசபுத்திரன் யோகராஜன்
- தே. செல்ரன் அன்ரனி
- மயூரி அருள்வரதன்
- பேரின்ப சிவம் சிவகோனேசன்
- கொகமட் மொகைதீன் முபாரத்
- சிவஞானம் சிவஞானேஸ்வரி
- ஏ. பி. நசார்கான்
- தம்பிராசா சுசாந்தி
- அர்ஜுன் மகேந்திரநாதன்
- ரஞ்சனி ராஜ்மோகன்
- சட்குருநாதன் சுமித்திரா
- சிவராஜா தகீசன்
- பாக்கியநாதன் லீமாரோஸ்
- இராமலிங்க முர்த்தி நிசாந்திகா
- சோக்கல்லோ சன்முகநாதன்

## தொழினுட்ப கலைஞர்கள்

பி. விக்னேஸ்வரன் - காட்சியமைப்பு

வே. யோகநாதன் - மேடை நிர்வாகம்

டப்ளியூ. செல்வராஜா - ஒப்பனை

பிரதி வாசிப்பு :- சன்முகராஜன் - கஜமதி

சுகன்யா பிரான்சிஸ் :- இசையமைப்பு

பூ. யோகநாதன் :- கதை வசனம்

நெறியாள்கை - பூ. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணி கலை இலக்கிய மன்றம் வழங்கும்

# தெரு விளக்கு

## நடிகர்களும் நடிகைகளும் - பாத்திரங்களும்

- எஸ். பி. டக்லஸ் - ராஜகுமாரன்
- பிரியா ஜயந்தி - நிர்மலா
- கலாபூஷணம் ஆர். கே. புஹாரி - பிச்சைக்காரன்
- கலாபூஷணம் கே. சோமசுந்தரம் - மனநோயாளி
- கே. ரட்ணலிங்கம் - வயோதிப மாது
- அலேக்சாண்டர் - போதைப்பொருள் பாவனையாளர்கள்
- கமல்ராஜ் - முதலாளி
- மாஸ்டர் நிகேஸ் மதுசங்கர் - சிறுவன்
- ஆர். கணேசன்
- என்டன்
- நேசன் } (தெருவாசிகள்)

## தொழினுட்ப கலைஞர்கள்

ஜி. டி. ரீகன் - ஒளியமைப்பு

ஆர். கே. புஹாரி - காட்சியமைப்பு

மரியசாலினி - மேடை நிர்வாகம்

கே. ரட்ணலிங்கம் - ஒப்பனை

பிரியா ஜயந்தி - உடையலங்காரம்

பின்னணி பாடுபவர்கள்:- எஸ். பி. டக்லஸ்<br>ஆர். கே. புஹாரி

பிரதி வாசிப்பு :- மெரினா பெனாண்டோ<br>மரிய சாலினி

எம். எஸ். கின்ஸ்டன் - இசையமைப்பு

எம். எமர்சன் - வாத்திய கலைஞர்

கே. சோமசுந்தரம் - உதவி இயக்கம்

பாடல் - கதை வசனம் - நெறியாள்கை:- எஸ். பி. டக்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளும் - முற்றுப்புள்ளிகளும்

## நடிகர்களும் நடிகைகளும் - பாத்திரங்களும்

- வ. அ. தங்கவேலாயுதம் - தொண்டர்
- ஸ்ரீனிவாசகம் ஸ்ரீகரன் - துறவி
- கே. மோகன்குமார் - விஜயன்
- ராஜஸ்ரீ - குவேனி
- கே. தியாககுமார் - தளபதி தத்தன்
- எஸ் என். நடராஜா - காவலன்
- அனுசா அருச்சுனன் - பணிப்பெண்
- அனுசா ராமநாதன் - பணிப்பெண்

| சிறுபான்மை இனத்தவர்கள் | பெரும்பான்மை இனத்தவர்கள் |
|---|---|
| ☆ ஆ. வீரபுஸ்பநாதன் | ☆ பி. செல்வராஜ் |
| ☆ எம். செல்வம் | ☆ பி. பத்மநாதன் |
| ☆ பி. டிரோன் | ☆ எஸ். கார்த்திக் |
| ☆ எஸ். எஸ். சித்தார்த்தராஜா | ☆ என். ஆர். நிக்ஷன் |

## தொழினுட்ப கலைஞர்கள்

எஸ், கிங்ஸிலி - ஒளியமைப்பு

கே. ரட்ணலிங்கம் - காட்சியமைப்பு

என். ராஜரட்னம் - ஆர். சிதம்பரம் - மேடை நிர்வாகம்

எஸ். மனோஜ் குமார் - ஒப்பனை

எம். கபூர் - உடையலங்காரம்

ஏ. ஜெயகௌரி - செல்வம் பெனான்டோ - பிரதி வாசிப்பு

எஸ். ரவிச்சந்திரன் - இசையமைப்பு

ஏ. கிருஷ்ணகுமார், பி. சிவகுமார் - வாத்திய கலைஞர்கள்

வ. ஆ. தங்கவேலாயுதம், பக்கீர் மொகமட் - உதவி இயக்கம்

சர்மிளாபவாஸ், வளவை வளவன் - பாடல்கள்

பின்னணி பாடுபவர்கள்:- ஆ. வீரபுஸ்பநாதன், ஆர். மணிமேகலை, சகாயம் பெனான்டோ, ஜெயகுமார், பி. சிவக்குமார்

ஆர். கே. புஹாரி

உதயா கணேசன் - தயாரிப்பு நிர்வாகம்

மா. செல்லத்தம்பி (வளவை வளவன்) - கதை சவனம்

நெறியாக்கை - கே. மோகன்குமார்

கமலஸ்ரீ மோகன்குமார் - தயாரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின் கலை மன்றம் வழங்கும்

# வெளிச்சம் தெரிகிறது

## நடிகர்களும் நடிகைகளும் - பாத்திரங்களும்

❖ எஸ். கந்தையா - தங்கராஜ் (தலைவர்)
❖ எஸ். சத்யன் - கன்னையா (கணவன்)
❖ மல்லிகா கீர்த்தி - முத்தம்மா (மனைவி)
❖ கே. ரம்யகலா - சரஸ்வதி (மகள்)
❖ ஆர். சிதம்பரம் - மாரிமுத்து (முதலாளி)
❖ ஏ. வீரபுஸ்பநாதன் - லோகநாதன் (மாஸ்டர்)
❖ ஆர். எஸ். ராஜா - தொழிற்சங்க பிரதிநிதி
❖ கேசன் - மனோ (முதலாளி மகன்)
  - சிவா மனோவின் நண்பன்
❖ விக்டர் - வேலு (வேலைக்காரன்)
❖ ஜீ. பாலநாதன் - கசிப்பு சுமப்பவன்
❖ எம். ஆனந்தன் - இன்ஸ்பெக்டர்
❖ எம். கருணானந்த ராஜா - (பொலிஸ்காரன்)

## தொழினுட்ப கலைஞர்கள்

கலாபூஷனம் ஜே. பி. ரொபட் - ஒளியமைப்பு நிர்வாகம்
எஸ். சத்தியன் - காட்சியமைப்பு
எம். ஆனந்தன் - காட்சியமைப்பு உதவி
ஏ. ஏஸ். கே. தாசிம் - மேடை நிர்வாகம், மேற்பார்வை
எம். கபூர் - ஒப்பனை
மணிமேகலை ராமநாதன் - உடையலங்காரம்

**பிரதி வாசிப்பு**

ஏ. ஜெயகௌரி - செல்வம் பெனான்டோ
ஆர். சந்திரதாஸ் - இசையமைப்பு
கே. கோவிந்தராஜ் - கதை வசனம்

**நெறியாள்கை**

மணிமேகலை இராமநாதன்

**தயாரிப்பு**

எஸ். கந்தையா (ஜே. பி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறந்த நாடகமாக தெரிவு செய்யப்பட்ட
"அகதிச் சிறுவனுக்கு அட்மிஷன் கிடைக்கிறது"
என்ற நாடகத்தில் ஒரு காட்சி



வாணி கலை இலக்கிய மன்றத்தினரின்
"தெருவிளக்கு" நாடகத்தில் ஒரு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவின் கலை மன்றத்தினரின் "வெளிச்சம் தெரிகிறது"
என்ற நாடகத்தில் ஒரு காட்சி



கிருஷ்ண கலாலயத்தின் "முரண்பாடுகளும்
முற்றுப்புள்ளிகளும்" என்ற நாடகத்தில் ஒரு காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் குழுவினரின்
# உள்ளத்திலிருந்து....

அரச தமிழ் நாடகக் குழுவில் அங்கம் வகிக்கும் நாங்கள் பல கஷ்டங்கள், குறுக்கீடுகள் மத்தியில் தமிழ் நாடக விழாவை நடத்தி முடித்தோம். எனினும் பரிசளிப்பு விழாவிற்கான நிதி ஒதுக்கீடு கால தாமதமாக எங்களுக்கு வந்து சேர்ந்ததினால் இவ்விழாவை குறித்த நேரத்தில் நடந்த முடியாமல் போனதிற்கு மனம் வருந்துகிறோம். இந்த நிதியானது எங்களுக்கு கிடைத்தவுடனேயே பரிசளிப்பு விழாவை நடத்தி விடவேண்டும் என்பதால் சில முன்னெடுப்புக்கள் செயலாக்கம் பெறமுடியவில்லை. குறிப்பாக இந்த மலரை வெளியிடுவதற்கு குறுகிய கால அவகாசமே கிடைத்ததால் இதைவிட சிறப்பாக இந்த மலரை அமைக்க முடியாமல் போய்விட்டது. இந்த நாடக மலரில் நாடகம் பற்றிய காத்திரமான பல கட்டுரைகளை வெளியிடவிருந்தோம்.

மேற்கூறிய தவறுகளுக்கும், தாமதங்களுக்கும் தமிழ் நாடகக்குழு பொறுப்பல்ல. ஆனாலும் தமிழ் நாடக விழாவில் பங்குபற்றிய நாடக கலைஞர்கள் ஏமாற்றமடையக்கூடாது என்பதில் தமிழ் நாடகக்குழு அதிவிரைவாக எடுத்துள்ள நடவடிக்கையே இந்த பரிசளிப்பு விழாவாகும். இதில் சில குறைப்பாடுகள் இருக்கலாம். எதிர்காலத்தில் நடைபெறும் நாடக விழா பரிசளிப்பு விழா ஆகியவற்றை சிறப்பாக செய்து முடிக்க வும், சிறப்பானதொரு மலரை வெளியிடவும் அரச தமிழ் நாடகக்குழு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

**எம். உதயகுமார்**
**மாத்தளை கார்த்திகேசு**
**ஆர். ராஜசேகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்!

★ இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த மனித வள அபிவிருத்தி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு, சிறப்பு விருந்தினர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ மனோகணேசன், கௌரவ பெ. இராதாகிருஷ்ணன், கலாசார திணைக்கள பணிப்பாளர் திரு. எம். லக்ஷ்மன் பெரேரா, இலங்கைக்கலைக்கழக தலைவர் பேராசிரியர் அநுராத செனவிரத்தன.

★ நாடகவிழாவில் பங்குகொண்ட அனைத்து நடிக, நடிகையர்கள், தொழினுட்ப கலைஞர்கள்.

★ தமது சிரமங்களை பாராது நடுநிலையாக பணியாற்றிய நடுவர்கள்.

★ நாடக விழாவிற்கும் பரிசளிப்பு விழாவிற்கும் பெருந்தன்மையுடன் தகவல்கள் மக்கள் மத்தியில் பரவ உதவி புரிந்த ஊடகத்துறையினர்.

★ கலை நிகழ்ச்சிகளை தந்துதவிய கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரி நிலையத்தினர், கலைத்தென்றல் பரதநாட்டிய நிலையத்தினர்.

★ சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை கலைக்கழகத்தினர், கலாசார திணைக்களத்தினர், இராமகிருஷ்ணமிஷன் மண்டப நிறுவனத்தினர்.

★ இன்றைய நிகழ்விற்கு தங்கள் பெயர்களை குறிப்பிடாமல் உதவிகள் பல புரிந்த பெருந்தகைகள்.

★ இம்மலரை மிகக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத்தந்த Vickram Printers ஸ்தாபனத்தினர்.



– இலங்கைக் கலைக்கழக
தமிழ் நாடகக்குழுவினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் நாள் நாடக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாசார திணைக்களப் பணிப்பாளர் **திரு. லக்ஷ்மன் பெரேரா**



இரண்டாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலைஞரும், கலைக்கழக உறுப்பினருமான **திரு. ஹென்றி ஜெயசேன**



நாடகவிழாவின் போது மகிழ்வுடன் மங்களவிளக்கேற்றும் தமிழ்நாடகக்குழுத் தலைவர் **எஸ். தில்லைநடராஜா**வுடன் குழுஉறுப்பினர்கள் **மாத்தளை கார்த்திகேசு ஆர். ராஜசேகரன், உடப்பூர் வீரசொக்கன்**

Up Vickram Printers 074 -610490
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org